மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா விடை நேரம் முடிவுற்றது. இன்றைய வினாப் பட்டியலில் கண்டுள்ள மற்ற வினாக்களும் இவற்றுக்கான விடைகளும் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 843: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இப்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துக்குமாரபுரம் அருகில் புதிய அணை மற்றும் கண்மாயும் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 844—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளாத்திக்குளம் ஒன்றியம் முத்துக்குமாரபுரம் அருகே புதிய அணையும் குளமும் அமைக்க அரசே நடவடிக்கை எடுத்தும் அரசு ஒப்புதல் அளிக்கவில்லையே ஏன்?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் குறித்து 1979-ல் தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் கண்மாயில் சேமித்து வைக்கக்கூடிய